# போரதீவுப் பற்றுப் பிரதேசத்திலுள்ள 1C பாடசாலைகளின் ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் அடைவுமட்ட வீழ்ச்சி பற்றிய ஓர் ஆய்வு

சு. மகேந்திரராசா

Department of Education and Child Care, Faculty of Arts and Culture,
Eastern University of Sri Lanka, Sri Lanka
rathinimaha@gmail.com

**சுருக்கம்:** இன்று போகுமிடமெல்லாம் புலமைப்பரிசில் பாடத்துடன் இணைந்த விடயங்கள் ஒட்டிக் கொண்டிருப்பதை எல்லோரும் அறிவர். புலமைப்பரிசில் பரீட்சை முக்கியமானதுடன் தவிர்க்கமுடியாததுமாகும். புலமைப்பரிசில் பற்றிய சிந்தனைகளும், ஆற்றல்களும் பிறப்பிலிருந்து ஆரம்பித்தாலும் பாடசாலைகளிலேயே முறையான விதத்தில் அவை கட்டுமானம் செய்யப்பட வேண்டும். இச்சந்தர்ப்பத்தில் பல பிரச்சினைகள் மாணவர்களது கற்றலில் தாக்கம் செலுத்தி அவை அடைவுமட்டத்தைப் பாதிக்கின்றன. இதனைக் கருத்திற்கொண்டு இந்த ஆய்வானது புலமைப்பரிசில் பாட அடைவுமட்டம் தொடர்பான பிரச்சினைகளைக் கண்டறிந்து தீர்வுகளை முன் வைப்பதனூடாக அடைவுமட்டத்தை மேம்படுத்தும் நோக்கத்தைக் கொண்டது. இது அளவை நிலை ஆய்வு முறையில் வடிவமைக்கப்பட்டு, போரதீவுப் பற்றுப் பிரதேசத்திலுள்ள ஐந்து 1C பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டன. அப் பாடசாலைகளில் புலமைப் பரிசில் பரீட்சையின் அடைவுமட்டப்போக்கு எவ்வாறுள்ளது, அடைவு மட்டத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் யாவை என்பவற்றைக் கண்டறிவதற்காக அப்பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் ஆகியோர் வசதி மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு வினாக்கொத்து, நேர்காணல், அவதானம், ஆவணங்கள் மூலம் பல தரவுகள் பெறப்பட்டன. சேகரிக்கப்பட்ட தரவுகள் யாவும் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையின் அடைவு மட்டத்தின் போக்கு எவ்வாறுள்ளது, இத்தகைய நிலைக்கு என்ன காரணம், புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைவதில் மாணவர்கள் எதிர் நோக்கும் இடர்பாடுகள் யாவை, புலமைப்பரிசில் பாடக் கற்றல், கற்பித்தலுக்குப் பொருத்தமான வளங்களின் நிலைப்பாடு என்ன என்பன போன்ற விடயங்களை உள்ளடக்கி ஆய்வு நோக்கத்தின் அடிப்படையில் அளவு ரீதியாகவும், பண்பு ரீதியாகவும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. ஆய்வு முடிவுகளில் இருந்து, அதிபரின் வினைத்திறனான முகாமைத்துவமின்மை, தேவையான வளவசதிகளைச் செய்து கொடுக்காமை, கற்பிக்கும் அனுபவம் ஆசிரியர்களுக்கு இன்மை, பிள்ளையின் கல்வியில் அக்கறையற்ற பெற்றோர், புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர்களின் அக்கறையின்மை போன்ற பல்வேறு காரணிகள் மாணவர்களின் புலமைப்பரிசில் பரீட்சை வீழ்ச்சிக்குக் காரணமாக அமைகின்றன எனக் கண்டறியப்பட்டது. ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் அடைவு மட்டத்தை அதிகரிப்பது தொடர்பில் காணப்படும் இடர்களைக் கண்டறிந்து அடைவுமட்டத்தை மேம்படுத்துவதற்கான விதந்துரைகளை முன்மொழிவதாயும் இந்த ஆய்வு அமைகின்றது. எதிர்வரும் காலங்களில் இவ் விதந்துரைகளைப் பின்பற்றிச் செயற்படும்போது புலமைப்பரிசில் அடைவுமட்டத்தை அதிகரிக்க முடியும்.